[1978 மார்ச் 1!

கள்ளக்குறிச்சி பேரூராட்சி

*518 வினா—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது குறித்து ஒரு செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்னால் அந்தப் பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் யார் யார் நகராட்சியில் பணிபுரிய இசைகிறார்கள் என்பது கேட்டு அறியப்படுமா ? அவ்வாறு கள்ளக்குறிச்சியில் எந்தெந்த ஆசிரியர்கள் பணிபுரிய விரும்பு கிறார்கள் என்று தெரிந்த பிறகு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சியாக மாற்றுவது என்பது இன்னும் முடிந்த முடிவல்ல. அது பரிசீலனையில்தான் இருக்கிறது. அது ஒன்றியம் தரக்கூடிய ஒத்துழைப்பு, பேரூராட்சி தரக்கூடிய ஒத்துழைப்பு, இவை களினுடைய தீர்மானங்கள் ஆகிய இவற்றை ஒட்டித்தான் அரசு முடிவு செய்யும்.

மாநகர வளர்ச்சித் திட்டம்

*519 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னை மாநகரப் பகுதியின் பெருந்திட்டம் விரிவான வளர்ச்சித் திட்டங்களாக பல பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) இதில் இதுவரை அரசு அங்கீகாரம் அளித்துள்ள வையின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

1978 மார்ச் 11]

(ஆ) வளர்ச்சி சீரானதாக அமைய விரிவு வளர்ச்சி திட்டங்களின் துணையோடு முழுமைத் திட்டம் செயல்பட சென்னை நகரம் 99 திட்டக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றிற்கும் தனியான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட இருக்கிறது.

இத்திட்டத்தில் மனைக்கான நிலப்பயன் தவிர, புதிதாக அமைக்கப்பட இருக்கும் தெருக்கள், நேர்பாடு வரம்பு நிர்ணயிக்கப்பட்ட தெருக்கள், அகலப்படுத்தப்பட வேண்டிய தெருக்கள், தொடர் கட்டிடங்கள் அனுமதிக்கப்படக்கூடிய பகுதி, பொருளாதாரப் பின்னடைவு பெற்றோர்க்கான குடியிருப்புகளுக்கான பகுதி மற்றும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அனுமதிக்கப்படக்கூடிய பகுதிகளையும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(இ) இதுவரை 38 பகுதிகளுக்கு விரிவு வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் நோக்கத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வெளியிட்டு, அதில் 22 திட்டங்களைப் பதிப்பிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. 15 திட்டங்கள் பெருநகர் வளர்ச்சி குழும அங்கீகாரம் பெற்று அரசினின் இறுதி ஒப்புதலைப் பெற இருப்பதால் எந்த ஒரு விரிவு வளர்ச்சித் திட்டமும் இதுவரை அரசின் அங்கீகாரம் பெறவில்லை.

திரு. மு. அரங்கநாதன் : இந்தப் பெருநகர் திட்டத்திற்கு மாநகராட்சியிலிருந்து 180 கோடி ரூபாயில் ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருந்தார்களே, அது எந்நிலையில் உள்ளது? இப்போதுள்ள பெருநகர் திட்டத்திற்கு உலக வங்கி எவ்வளவு கடன் கொடுக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி, திட்டம் பல பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதைப்பற்றி. பிரிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : சென்னை நகரில் விரிவடைந்துவரும் மக்கள் தொகையைக் கணக்கில்கொண்டு இந்தத் திட்டத்தோடு மாஸ்கோ, லெனின்க்ராட்-ல் இருப்பதுபோன்று பாதாள ரெயில்வே போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கான முறையில் அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. சு. நல்லதம்பி: இப்பெருநகர் திட்டம் காரணமாக சென்னை நகரில் வசிக்கிற நடுத்தர மக்கள் அல்லது பிற்பட்ட மக்கள் சிறிய வீடுகள் கட்டிக்கொள்ள பல சங்கடங்களும் தொல்லைகளும் ஏற்படுவதாக பொதுவாகப் பேசப்படுகிறதே, அதைப் போக்குவதற்கு அமைச்சரவை ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம் குடிநீர்த் திட்டம்

*520 வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியில் இருந்து குடிநீர் கொண்டுவருவதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தில் சின்னசேலத்தையும் இணைத்து செயல்படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கள்ளக்குறிச்சி பேரூராட்சி மணிமுக்தா நதியிலிருந்தும், சின்னசேலத்திற்கு கோமுகி நதியிலிருந்தும் குடிநீர் வசதி பெற குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டதா ? அப்படி ஆய்வு செய்யப்பட்டது என்னவாயிற்று ? சின்னசேலம், கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் எவ்வளவுதான் புயல், வெள்ளம் ஏற்பட்டாலும் இன்னும் ஆறு மாதத்திற்குள்ளாக அங்கே குடிநீர் பஞ்சம் நிச்சயமாக வரும் என்ற நிலைதான் இருக்கிறது. எனவே எவ்வளவு விரைவில் அத்திட்டம் முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கென விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில் கோமுகி ஆற்றில் கீழ் அணைக்கருகில் தலைமைப் பீடம் அமைத்து